செ. கு. எண்: 045 நாள் :9.02.2016

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 9.2.2016

திருவண்ணாமலை நகரம், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அருகிலுள்ள அய்யங்குளத்தில் 8.2.2016 அன்று நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியின் போது திருவண்ணாமலை நகரத்தைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் புண்ணியக்கோட்டி, திரு. சீனுவாசன் என்பவரின் மகன் வெங்கட்ராமன், திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் மணிகண்டன், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், நீலமங்கலம் பகுதியைச் சேர்ந்த திரு. சீனுவாசன் என்பவரின் மகன் சிவா ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**